செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.06.2018

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : மே 2018


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2018 மே மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் திரு டி.ஜீ.எஸ்.ஜீ.முணசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2.1% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2018 ஏப்றல் மாதத்தில் பதிவாகிய பணவீக்கம் 1.6% ஆக இருந்து. கடந்த மூன்று மாதங்களாக பணவீக்கம் 3.0% சதவீதத்துக்கும் குறைவாகவே காணப்பட்டிருந்தது. 2018 மே மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே -0.02%, 2.05% ஆக இருந்த அதேவேளை, 7.1% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2017 மே மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 4.6%, 2.5% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2018 ஏப்றல் மாதத்தில் பதிவாகிய 122.9 இருந்து 2018 மே மாதத்தில் 124.3 ஆக அதிகரித்துள்ளது. இது, 2018 ஏப்றல் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 மே மாதத்தில் 1.4 சுட்டெண் புள்ளிகள் அதாவது 1.1 சதவீத புள்ளிகள் அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.55% இனாலும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.61% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் மரக்கறி, புதிய மீன், பெரிய வெங்காயம், எலுமிச்சம்பழம், உருளைக்கிழங்கு, கோழி இறைச்சி, முட்டை, கருவாடு, பச்சை மிளகாய், இஞ்சி, குழந்தைப் பால்மா மற்றும் பால்மா என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் குறைந்த செலவுப் பெறுமதிகள் தேங்காய், வாழைப்பழம், பப்பாசிப்பழம், மாம்பழம், வெள்ளைப்பூடு, அரிசி மற்றும் கடலை என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 மே மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘போக்குவரத்து’, ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’, ‘சுகாதாரம்’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’ அத்துடன் ‘ஆடையும் காலணியும்’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். 2018 மே 11ஆம் திகதியிலிருந்து எரிபொருள் விலைகள்(பெற்றோல் மற்றும் டீசல்) அதிகரிக்கப்பட்டமையே ‘போக்குவரத்து’ பிரிவின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கு பிரதான காரணமாகும். ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’ பிரிவின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கும் பிரதான காரணம், 2018 ஏப்றல் 28ஆம் திகதியிலிருந்து எல்.பி.எரிவாயு விலையும் 2018 மே 11ஆம் திகதியிலிருந்து மண்ணெண்ணெய் விலையும் அதிகரிக்கப்பட்டமையேயாகும். இருப்பினும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’ பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் குறைவு பதிவாகியது. அதேநேரம், ‘தொடர்பாடல்’, ‘கல்வி’ மற்றும் ‘உணவகமும் ஹோட்டல்களும்’ ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதிகள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.




தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2017** | மே | 121.8 | 0.7 | 7.1 |
| | யூன் | 123.4 | 1.3 | 6.3 |
| | யூலை | 122.4 | -0.8 | 6.3 |
| | ஓகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 |
| | செப்ரெம்பர் | 123.3 | 0.8 | 8.6 |
| | ஒக்ரோபர் | 124.8 | 1.2 | 8.8 |
| | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 |
| | டிசம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| **2018** | ஜனவரி | 125.8 | -0.6 | 5.4 |
| | பெப்ரவரி | 123.7 | -1.7 | 3.2 |
| | மார்ச் | 122.8 | -0.7 | 2.8 |
| | ஏப்ரல் | 122.9 | 0.1 | 1.6 |
| | மே | 124.3 | 1.1 | 2.1 |